



# ஶரணாகதி வைபவம்

## (ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் ஸாதித்த உபந்யாஸத் தொகுப்பு)



தொகுப்பாசிரியர்

ந்யாயவேதாந்த வித்யாநிதி, ராமாநுஜஸேவாஸ்ரீ
**ஸ்ரீ.உ.வே. காடந்தேத்தி திருச்சேறை முனைவர் ஆஸூரி இராமாச்சார்யார்**

ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹமஹாதேஶிகன்
7வது சாதுர்மாஸ்ய ஸங்கல்ப வெளியீடு

விஶ்வாவஸு வருஷம் ஆனி 26, 10-07-2025

॥ श्रीः ॥

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகாய நம:

# ஶரணாகதி வைபவம்

## (ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் ஸாதித்த உபந்யாஸத் தொகுப்பு)



**ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜமுநி கருணாலப்த வேதாந்தயுக்மம்**
**ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகீஶ்வர குருபதயோரர்பித ஸ்வாத்மபாரம்।**
**ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முநிக்ருபயாப்ராப்த மோக்ஷாஶ்ரமம் தம்**
**ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ முநிமபரம் ஸம்ஶ்ரயே தேஶிகேந்த்ரம்॥**

---

ந்யாய வேதாந்த வித்யாநிதி ஸ்ரீ உ.வே. காடந்தேத்தி திருச்சேறை,
**முனைவர் ஆஸூரி. இராமாச்சாரியார்**
நியாயசிரோமணி, எம்.ஏ.ஆசார்யா, எம்.பில்., பிஹெச்.டி
Cell: 94866 45951
ஸ்ரீவிஶ்வாவஸு வருஷம் 10.07.2025

---

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ஶரணாகதி வைபவம் |
| தொகுப்பாசிரியர் | : | முனைவர். வீ. இராமன், |
| மொழி | : | தமிழ், ஸம்ஸ்க்ருதம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 10.07.2025 |
| பக்கங்கள் | : | 36 |

॥ஸ்ரீ:॥

ஸ்ரீமதே ஸ்ரீவராஹமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாச ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாச மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேசிகாய நம:
ஸ்ரீ ரங்கநாயிகா சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

Srimathe SriVaraha Mahadesikaya Nama:
Srimathe SriRangaramanuja Mahadesikaya Nama:
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Nama:
Srimathe SriVedantha Ramanuja Mahadesikaya Nama:
Srimathe Srinivasa Mahadesikaya Nama:
Srimathe Nigamantha Mahadesikaya Nama:
Srimathe Bhagavate Bhashyakaraya Mahadesikaya Nama:
Srimathe Vagulabooshana Mahadesikaya Nama:
Sri Ranganayika Sametha Sri Ranganatha Parabhramane Nama:
Sri Ranganatha Divyamani Padukabhyam Nama:

SRIRANGAM SRIMATH ANDAVAN ASHRAMAM
HQ: Melur Road, Srirangam, Tiruchirapalli, Tamil Nadu

New No. 33, Old No. 23, Desikachari Road,
Mylapore, Chennai 600 004 044 – 2499 3658

---



## ஸ்ரீமுகம்

வேதமும் வேள்வியும் விண்ணும் இருசுடரும்
ஆதியுமானான் அருள் தந்தவா நமக்கு
போதலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன்
ஓதமும் நானும் உறங்காதிருந்தேனே.

ஶ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன் தன் அடியார்களை ரக்ஷிக்கவேண்டும் என்பதற்காக தாமே உகந்து

மத்ஸ்யகூர்மாதி அவதாரங்களை எடுத்தான். எடுக்கப்பட்ட பத்து அவதாரங்களில் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் தான் பூர்ணாவதாரங்கள். மற்றவைகள் அம்ஶாவதாரங்கள். எப்படியிருந்தாலும் எல்லா அவதாரங்களும் ஆஶ்ரிதர்களை காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்டவை. ஆனால் பூர்ணாவதாரத்தில் எம்பெருமானுடைய ஶரணாகதரக்ஷண தர்மத்தை முழுவதுமாக அநுபவிக்கமுடியும். அதிலும் இராமாவதாரத்தில் ஶரணாகதி தர்மம் தான் முதன்மையாகப் பேசப்படுகிறது. அதில் விபீஷண ஶரணாகதி மிகவும் முக்யமானதொன்று. இந்த ஶரணாகதி யாருக்காக ஏற்பட்டது என்றால் ஜீவர்களான ஶரணாகதர்கள் ஶரண்யனான எம்பெருமானை அடையவேண்டும் என்பதற் காக ஏற்பட்டது. விபீஷணன் **ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே** என்று ராகவனை ஶரணடைந்தான். இப்பொழுது சக்ரவர்த்தித் திருமகன் ஸமுத்ரத்தை கடக்க வேண்டும். அதற்கு கடலரசன் வழிவிடவில்லை, என்செய்வது என்று இராமபிரான் விபீஷணனைக் கேட்க, **ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி** ஸமுத்ரராஜாவை ஶரணாகதி பண்ணால் கடக்கலாமென்று விபீஷணன் கூறுகிறான். ஶரண்யன் ஶரணாகதனை ஶரணாகதி பண்ணலாமா? என்றால் ஸகல கார்ய ஸித்திக்கு ஶரணாகதி தான் சிறந்த வழி என்பதை இது எடுத்துக் காண்பிக்கிறது. அப்படிப்பட்ட ஶரணாகதியின் பெருமைகள் ஶ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவனால் பலவாறாக உபந்யாஸங்கள் செய்யப்

பட்டுள்ளது. அதை தொகுத்து எழுதி ஆஶ்ரம ஶிஷ்யர் ஆஸூரி திருச்சேறை இராமாச்சாரியார் எளிய தமிழில் **ஶரணாகதி வைபவம்** என்ற தலைப்பில் ஒரு நூலாக வடிவமைத்து வெளியிட்டுள்ளார். இதுபோன்ற கைங்கர்யம் மேலும் மேலும் வளரவேண்டும் என்று ஶ்ரீரங்கம் திவ்யதம்பதிகளையும், பூர்வாசார்ய பாதுகைகளையும் ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.

நாராயண! நாராயண! நாராயண!

इत्थं
श्रीवराहयतिः

# பொருளடக்கம்

அடியேன் செய்யும் விண்ணப்பம்

1. நான்கு புருஷார்த்தங்கள்
2. ஶரணாகதி ஶாஸ்த்ரம்
3. தர்ம சிந்தனை
4. ஶரணாகதியும் பக்தியோகமும்
5. அபய ப்ரதானம்

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

**श्रिय:पति**யான ஶ்ரீமந்நாராயணன் எல்லா ஸ்ருஷ்டி களுக்கு காரணமாகவும், எல்லா கார்யங்களுக்கு நியந்தா வாகவும் (நடத்துபவனாகவும்) இருக்கிறான். அதனாலேயே அவனை ஶாஸ்த்ரங்கள் ஸர்வஜகத்காரணபூதன், ஸர்வ நியந்தா, ஸர்வேஶ்வரன் என்றெல்லாம் கூறுகின்றன. உயிருள்ள உயிரற்ற பொருட்களை தனக்கு ஶரீரமாகக் கொண்டவனாகையால் அவனுக்கு ஸர்வஶரீரி என்ற பெயருமுண்டு. அவனுக்கு உடலான எல்லா ஜீவாத்மாக் களும் அவனை அடைந்தால் தான் அவன் ஶரீரி என்பது நிலைபெறும். **ஶரணமாகும் தனதாள் அடைந்தார்க் கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்** என்ற ஆழ்வார் அருளிச்செயலுக்கேற்ப அவனிடத்தில் ஶரணாகதி பண்ணுவதே சிறந்த வழி. வேதவேதாந்த இதிஹாஸ புராணங்களும், ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் திவ்யஸூக்திகளும் பெரும்பாலும் ஶரணாகதி தர்மத்தையே போதிக்கின்றன.

ஒவ்வொரு மனிதனும் அடையவேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்பதான நால்வகை புருஷார்த்தங்கள். முதல்

மூன்று புருஷார்த்தங்களை எம்பெருமான் அநுக்ரஹித்த அறிவினாலும், உழைப்பினாலும், தான் செய்த கர்மவினைகளினாலும் அடைந்து அநுபவிக்கிறான். ஆனால் **ஶரணாகதி** என்ற வழியைப் பின்பற்றாமல் எம்பெருமானை அதாவது நான்காவது புருஷார்த்தத்தை அடையமுடியாது. **வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே** என்றபடி மண்ணவர்களான ஜீவாத்மாக்கள் சென்றடைய வேண்டிய இடம் ஸ்ரீவைகுந்தம். அந்த இடத்தை அடைவதற்கான வழியை ஶரணாகதி வைபவம் என்ற தலைப்பில் ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் ஸாதித்ததை தொகுத்து அடியேன் ஒரு நூலாக வடிவமைத்து ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹமஹாதேஶிகன் 7வது சாதுர்மாஸ்ய வைபவ தினத்தில் ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் ஸமர்ப்பித்துள்ளேன். இந்நூல் வெளியிடுவதற்கு வாசிக கைங்கர்யம் பண்ண உதவிபுரிந்த ஸ்ரீ. உ. வே. ரகுவீரதயாள் ஸ்வாமிக்கு அடியேனுடைய க்ருதஜ்ஞையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# நான்கு புருஷார்த்தங்கள்

**धर्मार्थकाममोक्षं** தர்மார்த்தகாமமோக்ஷம் என்பவைகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளவைகள் என்பதை திருமங்கையாழ்வார் **அம்மறைதான் மன்னும் அறம் பொருள் இன்பம் வீடென்றுலகில் நன்னெறி மேம்பட்டன நான்கன்றே** என்று பெரியதிருமடலில் அருளிச்செய்கிறார். இங்கே சொல்லப்படுகிற புருஷார்த்தம் என்பது புருஷன் என்கிற மனிதனால் ஆசைப்பட்டு அடையவேண்டியதான ஒன்று. தனம் என்ற செல்வமும் ஒரு புருஷார்த்தம் தான். ஆனால் அதை தர்ம வழியில் சென்று உழைத்து ஸம்பாதிக்க வேண்டும். காமம் என்பதும் ஒரு புருஷார்த்தம். அதாவது கல்வி கற்க ஆசைப்படுவது, பொருளீட்ட ஆசைப்படுவது, ஈட்டிய பொருளை இல்லற வாழ்க்கைக்கு பயன்படுத்த ஆசைப்படுவது போன்றதாகும். இந்த காமம் என்கிற புருஷார்த்தத்திற்கு துணையாக இருப்பவை தர்மமும், அர்த்தமும் ஆகும். இந்த காமம் என்பது மோக்ஷமாகிய பலனை தரவல்லது. அதாவது மோக்ஷமென்கிற புருஷார்த்தத்தை அடைய ஆசைப்படுவது என்று அர்த்தம்.

# ஶரணாகதி ஶாஸ்த்ரம்

ஶ்ரீமத்ராமாயணத்தை ஶரணாகதி வேதம் என்றும் ஶரணாகதி ஶாஸ்த்ரம் என்றும் கூறுவர். இதிலுள்ள ஏழு காண்டங்களிலும் ஶரணாகதி தர்மமே உபதேஶிக்கப் படுகிறது. பகவானைப் பற்றின சிந்தனை ஏற்படவேண்டும் என்றால் ஒருவனுடைய கோடிக்கணக்கான பிறவிகளில் மிக அதிகமாக புண்ணியப் பிறவிகள் எடுத்திருக்க வேண்டும். அந்த பிறவிகளின் கடைசியில் தான் என்னைப் பற்றிய ஜ்ஞானம் அறிவு உடையவனாக ஆகிறான். அப்படிப் பட்ட ஜ்ஞானத்தை  உடையவன் மிகவும் அரிது என்று ஶ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் பரக்கப் பேசுகிறார்-

**बाहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।**
**वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः॥**
பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:॥
**प्रयत्नात् यतमानस्तु योगी संशुद्धकिल्बिषः।**
**अनेकजन्मसंसिद्धस्ततो याति पराङ्गतिम्॥**
ப்ரயத்நாத் யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்தகில்பிஷ:।
அநேகஜந்மஸம்ஸித்திஸ்ததோ யாதி பராங்கதிம்॥

# தர்ம சிந்தனை

இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் ஆகிய மூவரும் கடுமையான தவம் செய்து ப்ரஹ்மாவிடம் தங்களுக்கு வேண்டியதான வரத்தைப் பெற்றார்கள். அப்பொழுது எவ்வளவு பெரிய ஆபத்து வந்தபோதிலும் தர்மத்தைப் பற்றியே நினைத்திருக்கவேண்டும் என்று விபீஷணன் கேட்டுக்கொண்டதாக ஸ்ரீவால்மீகி பகவான் வர்ணிக்கிறார்.

**परमापत् गतस्यापि धर्मे मम मतिर्भवेत्।**

பரமாபத் கதஸ்யாபி தர்மே மம மதிர்பவேத்। என்று.

கல்வி எவ்வளவு கற்றிருந்தாலும் தவறு செய்யும் காலத்தில் அது தடுக்காது. பிறருக்கு நாம் செய்யும் நல்லுபதேஶம் நாம் தவறு செய்யும்போது அந்த உபதேஶம் நமக்கு பயன்படாது. குலிங்கசகுனி என்ற பறவை ஸாஹஸம் செய்யாதே என்று கூறும். ஆனால் சிங்கம் கொட்டாவி விடும்போது அதன் வாய்க்குள் சென்று பற்களிலிருக்கும் மாமிசத் துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியில் வரும், அது செய்யும் உபதேஶம் அதற்கே பயன்படவில்லை.

**न गाता गातिनं शास्ति बहुचेदपि गायति।**
**प्रकृतिं यान्ति भूतानि  कुलिङ्गशकुनिर्यथा॥**
ந காதா காதிநம் ஶாஸ்தி பஹுசேதபி காயதி।
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி குலிங்கஶகுநிர்யதா॥

கைகேயியைப் பார்த்து இராமன் கூறுகிறான் – தாயே! நான் ஐஶ்வர்யத்திற்கு அடிமைப்பட்டவன் இல்லை. தர்மத்தை அநுஷ்டிக்கவந்த மிகச்சிறந்த ரிஷியாக என்னை நினைத்துக் கொள்ளுங்கள் என்று.

**नाहमर्थपरो देवि लोकमावस्तु  मुत्सहे।**
**विद्धिमां ऋषिभिस्तुल्यं केवलं धर्ममाश्रितम्॥**
நாஹமர்த்தபரோ தேவி லோகமாவஸ்து முத்ஸஹே।
வித்திமாம் ருஷிபிஸ்துல்யம் கேவலம் தர்மமாஶ்ரிதம்॥

பகவானை உணர்ந்த ஞானிகளுக்கு ஓட்டாஞ் சல்லியும், தங்கமும் வேறுபாடின்றி ஒரே மாதிரியாகத் தான் தெரியும் என்பதை பகவத்கீதையிலே பகவான் ஸ்ரீகிருஷ்ணன் எடுத்துக் காண்பிக்கிறார்-

**ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेन्द्रिय:।**
**युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकाञ्चन:॥**
ஜ்ஞானவிஜ்ஞானத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:।
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:॥

அப்படிப்பட்ட ஞானிக்கு விருப்பும் வெறுப்பும், புகழும் இகழும், மானமும் அவமானமும், நண்பனும் பகைவனும் போன்றவைகளில் வேறுபாடுகளே கிடையாது என்கிறார் பகவான்-

**तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः।**
**मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः॥**
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி:।
மாநாபமாநயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ:॥

ஆகையால் பகவானை அடைவதற்கு ஒரே வழி ஶரணாகதி தான் அதனால் பாவங்கள் தொலைந்துபோகும்.

மேலும் கிருஷ்ணபகவான் கூறுகிறார்- என்னால் ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்ய, ஶூத்ரர்களென்று நான்கு வர்ணங்கள் படைக்கப்பட்டன. அதனால் அவரவர்கள் தங்களுடைய குண, கர்மங்களுக்குத் தகுந்தாற்போல் கர்மாக்களைச் செய்து அதன் பலனை அடையவேண்டும் என்கிறார்.

**चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः।**
**तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम्॥**
சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ:।
தஸ்ய கர்தாரமபி மாம் வித்த்யகர்தாரமவ்யயம்॥

எந்த பலனை அடையவேண்டுமென்றாலும் அதற்காக உழைத்தால்தான் அதனை அடையமுடியும். ஸ்வர்க்கம் சென்று ஸுகத்தையநுபவிக்க வேண்டுமென்றால் **யஜேத ஸ்வர்ககாம:** என்றபடி யாகம் பண்ணவேண்டும். ஐஶ்வர்யம் வேண்டுமென்றால் ஸத்ரயாகம் பண்ண வேண்டும். ஸந்ததி வாரிசு வேண்டுமானால் புத்ரகாமேஷ்டி யாகமும், நீண்ட ஆயுளுக்கு ஆயுஷ்ஹோமமும் பண்ண வேண்டும். இப்படி வேதங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை முறையாகச் செய்து அந்தந்த பலனை அடையலாம்.

உலகத்தில், புண்ணிய பலனை அடைந்து ஸுகமாக வாழவேண்டும் என்று நினைப்பவர்கள் அதற்கான செயலைச் செய்வதில்லை. ஆனால் பாவத்தின் பலனான துக்கத்தை விரும்பாதவர்கள் முயன்று பாபத்தைச் செய்கிறார்கள் என்று ஒரு ஸுபாஷிதமானது அழகாக எடுத்துரைக்கிறது.

**धर्मस्य फलमिच्छन्ति नेच्छन्ति मानवा:।**
**फलं नेच्छन्ति पापस्य पापं यत्नेन कुर्वते॥**
தர்மஸ்ய பலமிச்சந்தி தர்மம் நேச்சந்தி மாநவா:।
பலம் நேச்சந்தி பாபஸ்ய பாபம் யத்நேந குர்வதே॥

ஒருவனுக்கு பலனை அடைவதில் ஆசையிருந்தாலும் அதற்கான செயல் (கர்மாவை) அவனால் செய்யமுடிய வில்லை. அப்படிப்பட்டவனுக்கு ஸகல பல ஸாதனமான ஶரணாகதியே சிறந்த உபாயம் (வழி). அதற்கு ப்ரமாணம் **तस्मान्न्यासमेषां तपसामतिरिक्तमाहु: தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹுः** என்பது.

என்னை அடைவதற்கு வேதாத்யயனம், தபஸ், தானம், ஆராதனம் இவைகள் பயன்படாது. பக்தியொன்றால் மட்டுமே என்னை அடையமுடியுமென்று ஶ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் உபதேஶிக்கிறார்-

**नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया।**
**शक्य एवं विधो द्रष्टुं दृष्टवानसि मां यथा॥**
**भक्त्या त्वनन्यया शक्य अहमेवं विधोऽर्जुन।**
**ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप॥**

நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா।
ஶக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ரஷ்டவாநஸி மாம் யதா॥
பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம் விதோऽர்ஜுந।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரம்தப॥

பக்தியினால் எம்பெருமானையே கட்டிப்போடலாம். அதற்கு அவன் வசப்படுகிறானென்று திருமங்கையாழ்வார் சிறியதிருமடலில் அநுபவிக்கிறார்.

கண்ணன் பிறக்கும்போது தன்னுடைய அவதார ரஸத்தை தேவகி பிராட்டிக்குக் காண்பித்தான். லீலா ரஸத்தை யஶோதைப் பிராட்டிக்கு காண்பித்தான். ஒரு ஸமயம் யஶோதைப் பிராட்டி மிகவும் கஷ்டப்பட்டு தயிர் கடைந்து கண்ணன் தூங்குகிறான் என்று அவனுக்குத் தெரியாமல் வெண்ணெயை உறியில் வைத்து மூடி, மோர்க் குடங்களையும் பத்திரப்படுத்திவிட்டு வெளியே செல் கிறாள். இதை கலியன்,

**ஏராரிடை நோவ எத்தனையோர் போதுமாய்**
**சீரார் தயிர் கடைந்து வெண்ணெய் திரண்டதனை**
**வேரார்நுதல் மடவாள் வேறார் கலத்திட்டு**
**நாராருறியேற்றி நன்கமையவைத்ததனை**
**போரரார் வேற்கண் மடவாள் போந்தனையும்**

என்று அநுபவிக்கிறார். இப்படி யஶோதைப் பிராட்டி வெளியே சென்றதும் பொய்யுறக்கம் செய்து கொண்டிருந்த கண்ணன் எழுந்து வந்து வெண்ணெய் பானையில் தன் தோள்பட்டை செல்லும்வரை கையை விட்டு வெண்ணெயை எடுத்து வாரி விழுங்கினான். இங்கு பொய்தூக்கத்திலிருந்து எழுந்தவனை ஆழ்வார் **ஓர் ஆதவன் போல் எழுந்தான்** என்று மிக அழகாக வர்ணிக்கிறார். **பொய்யுறக்கம் ஓராதவன் போல் உறங்கியறிவுற்று, தாரார் தடந்தோள்கள் உள்ளவும்**

**கைநீட்டி ஆராத வெண்ணெய் விழுங்கி** என்று வெண்ணெய் உண்டது மட்டுமல்லாமல் பக்கத்திலிருந்த எல்லா மோர்க்குடங்களையும் தள்ளி உருட்டிவிட்டு, யஶோதை பார்த்தாள் என்ன செய்வாளோ என்று மறுபடியும் தொட்டிலில் படுத்து உறங்கச்சென்றான். இதையும் ஆழ்வார்-

**ஆராத வெண்ணெய்விழுங்கி அருகிருந்த**
**மோரார் குடமுருட்டி முன் கிடந்த தானத்தே**
**ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும்**
**வாராத்தான் வைத்தது காணான்.**

என்று அநுபவிக்கிறார்.. யஶோதைப் பிராட்டி திரும்பி இல்லம் வருகிறாள். அவளை எதிர்கொண்டழைப்பது போல மோர்வெள்ளம் ஓடி வருகிறது. அதைப் பார்த்ததும் பதறிப்போய் இந்தக் காரியத்தை செய்தது யாராக இருக்கும்? எந்த மனிதரும், பூனை போன்ற பிராணிகளும் வந்ததாகத் தெரியவில்லையென்று வெண்ணெய் பானையைப் பார்க்கிறாள். ஒரு துளி கூட வெண்ணெய் இல்லை. வயிறு எரிய ஆரம்பித்தது. உறங்கிக் கொண்டிருக்கும் கண்ணனைப் பார்க்கிறாள். தோள்வரை வெண்ணெய். இவன் செய்த காரியம் தான் என்று முடிவு செய்து ஒரு கயிற்றை எட்டுத்துக்கொண்டு வந்து அவனைக்

கட்டி அதை உரலோடு பிணைக்க முற்பட்டபோது ஒரு சாண் குறைந்தது. மறுபடியும் மறுபடியும் கட்டுவதற்கு முயன்று தாய் சோர்ந்து போவதைப் பார்த்த பரந்தாமன் தனது உதரத்தில் தழும்பேறும் வரை தானே கட்டுண்டான். அதனால் தான் அவனுக்கு தாமோதரனென்ற பெயரும் ஏற்பட்டது. ஊரே பார்க்கும்படி யஶோதைப் பிராட்டி கயிற்றால் கண்ணனைக் கட்டியதை ஆழ்வார் இவ்வாறு அநுபவிக்கிறார்-

**வயிறடித்து இங்கு**
**ஆரார் புகுவார்? ஐயரிவரல்லால்**
**நீராம் இது செய்தீர்?என்று ஓர் நெடுங்கயிற்றால்**
**ஊரார்களெல்லாரும் காண உரலோடு**
**தீராவெகுளியளாய்ச்சிக்கென ஆர்த்தடிப்ப**
**ஆராவயிற்றினோடு ஆற்றாதான்.**

அப்படிப்பட்டக் கண்ணனை வேதம், தவம், தானம், ஆராதனம் போன்ற நான்குவித கயிறுகளால் கட்டமுடியாது தெரிந்துகொள்ள முடியாது. மாறாக அன்பு, ப்ரீதி, பக்தி பகவத்பக்தி ஆகியவைகளால் கட்டுப்படுத்த முடியும். நன்றாக அறிந்துகொள்ளமுடியும் என்பதையே கீதை உபதேஶிக்கிறது அதனால் பலத்தில் ஆசையில்லாமல் பகவத்பக்தியோடு அவன் ப்ரீதிக்காக எல்லா கர்மாக் களையும் பண்ணவேண்டும் அதுதான் தர்மம்.

**पद्माभिराम वदनेक्षण पाणि पादं**
**दिव्यायुधाभरण माल्य विलेपनं त्वाम् ।**
**योगेन नाथ शुभमाश्रयमात्मवन्तः**
**सालम्बनेन परिचिन्त्य न यान्ति तृप्तिम् ॥**

பத்மாபிராம வதநேக்ஷண பாணி பாதம்
திவ்யாயுதாபரண மால்ய விலேபநம் த்வாம்।
யோகேந நாத ஶுபமாஶ்ரயமாத்மவந்த:
ஸாலம்பநேந பரிசிந்த்ய ந யாந்தி த்ருப்திம்॥

எம்பெருமானை யோகிகள் எவ்வாறு த்யானிக்கிறார்கள் என்று ஸ்வாமி தேஶிகன் ஶ்ரீஶரணாகதி தீபிகை என்னும் ஸ்தோத்ர ப்ரபந்தத்தில் அருளிச்செய்துள்ளார்.

பக்தி யோகத்தைப் பற்றி கூறும்போது, மற்றவர்களை எதிர்பார்க்காமல், மற்றவர்களை சார்ந்திருக்காமல், மற்றவர்களுக்கு அடிமையாகாமல், பகவானுடைய ஸ்வரூபம் முதலானவைகளோடு கூடின திவ்யமங்கள விக்ரஹத்தை நிரதிஶய ப்ரீதிரூபமான ஒரு த்யானத்தை அதாவது இந்த த்யானமானது பகவானை நேரடியாக பார்க்கக்கூடியதும் ஸாக்ஷாத்காரத்திற்கு ஸமமானதும் பரமபதத்திற்குச் செல்லும்வரை தினந்தோறும் அநுஷ்டிக்கக் கூடியதாகவும் இறுதியில் பகவத் ஸ்மரணத்தைக் கொடுக்ககூடிய ஜ்ஞாந ஸந்ததி விஶேஷம்

ஜ்ஞாநத்தின் தொடர்ச்சியே த்யானம், அப்படிச்செய்யக் கூடியவர்களே ரிஷிகள்.

இப்படி பகவானை நினைத்து த்யானம் பண்ணும்போது ஆசை, பயம், கோபம் இவைகளை நினைக்காமல் மிகவும் ப்ரீதியுடனும், பக்தியுடனும் பண்ணவேண்டும். அப்படி என்னை ஜ்ஞாநிகள் த்யானம் செய்கிறார்கள் என்று கண்ணனே கீதையில் கூறுகிறான்-

**वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिता:।**
**बहवो ज्ञानतपसा पूता मद्भावमागता:॥**

வீதராகபயக்ரோதா மந்மயா மாமுபாஶ்ரிதா:।
பஹவோ ஞாநதபஸா பூதா மத்பாவமாகதா: என்று.

எம்பெருமானை அன்போடு எப்பொழுதும் நினைக்க வேண்டும். பயத்தினால் நினைத்தால் அது ப்ரயோஜன மாகாது. மாரீசனுக்கு **ரா** என்ற சொல்லைக் கேட்டாலே பயத்தால் உடல் நடுங்குமாம். இதை ராவணனிடத்தில் மாரீசனே கூறுகிறான். ராவணா! கையில் பாசக் கயிறோடு வரக்கூடிய யமனைப்போல் ஒவ்வொரு மரத்திலும் வில் அம்போடு கூடின ராமனைப் பார்க்கிறேன்-

**वृक्षे वृक्षे च पश्यामि चीरकृष्णाजिनाम्बरम्।**
**गृहीत धनुषं रामं पाशहस्तमिवान्तकम्॥**

**अपि रामसहस्राणि भीत: पश्यामि रावण।**
**रामभूतमिदं सर्वमरण्यं प्रतिभाति मे॥**

வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஶ்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம்।
க்ருஹீத தநுஷம் ராமம் பாஶஹஸ்தமிவாந்தகம்॥
அபி ராமஸஹஸ்ராணி பீத: பஶ்யாமி ராவண।
ராமபூதமிதம் ஸர்வமரண்யம் ப்ரதிபாதி மே॥

இந்த வனம் முழுவதும் எனக்கு ராமனாகத் தெரிகிறது என்று நடுக்கத்துடன் கூறி மேலும் எனக்கு ரகாரத்தில் வரக்கூடிய ரத்னம், ரதம் போன்ற சொற்களைக் கேட்டாலே பயம் ஏற்படுகிறது-

**रकारादि नामानि रामत्रस्तस्य रावण।**
**रत्नानि च रथाश्चैव त्रासं संजनयन्ति मे॥**

ரகாராதி நாமாநி ராமத்ரஸ்தஸ்ய ராவண।
ரத்நாநி ச ரதாஶ்சைவ த்ராஸம் ஸஞ்ஜநயந்திமே॥ என்று.

கம்ஸனும் பயத்தால் பல இடங்களில் கண்ணனைப் பார்ப்பதாகக் கூறுகிறான். கண்ணன் எந்த ஸமயத்தில் எந்த உருவத்தில் வந்து தன்னைக் கொன்று விடுவானோ என்று நடுங்கித் தன் படுக்கையை நன்றாக சோதித்துத் தான் படுக்கச் செல்வானாம். தன் பார்யை பால் கொடுத் தாலும் அதில் விரலை விட்டுப் பார்த்து கிருஷ்ணனில்லை என்று தெரிந்த பிறகு பாலைப் பருகுவானாம். இப்படி மாரீசனும், கம்ஸனும் பயத்தினால் கண்ணனை

நினைத்தது பக்தி அநுபவம் ஆகாது. எம்பெருமானை ப்ரீதி யோடு அநுபவிக்கவேண்டும் என்பதை தண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகள் காண்பித்துக் கொடுக்கிறார்கள். இதை வால்மீகி பகவான் அழகாக வர்ணிக்கிறார்-

**रूपसंहननं लक्ष्मीं सौकुमार्यं सुवेषताम्।**
**ददृशुर्विस्मिताकारा रामस्य वनवासिनः॥**

ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம்।
தத்ருஶுர்விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிந:॥

மிகவும் அழகான ஸீதாராமலக்ஷ்மணர்கள் தண்ட காரண்யம் ப்ரவேஶிக்கின்றனர். அப்போது வனவாஸிக ளான ரிஷிகள் அன்போடு வந்து ஸேவிக்கின்றனர் என்று, அதுவே பகவத் பக்தியாகும்.

ஆயர்பாடியில் கோபஸ்த்ரீகளும் ப்ரீதியாலே கண்ணனை அநுபவித்ததால் கண்ணனும் அவர்களுக்கு கருணையோடு காட்சி கொடுத்து அவர்களோடு ஆடிப்பாடி தன் அநுபவத்தைக் கொடுத்தான். **ஞானம் கனிந்த நலங்கொண்டு நைபவர்க்குத்** தான் எம்பெருமான் தன் அநுபவத்தைக் கொடுப்பான். இதுபோன்ற பக்தியோகத்தை ஆயுள் முழுவதும் செய்யவேண்டுமென்று ப்ரஹ்மஸூத்ரகாரரான ஸ்ரீவ்யாஸபகவான் **आप्रयाणात् तत्रापि हि दृष्टम् ஆப்ரயாணாத்**

**தத்ராபி ஹி த்ருஷ்டம்** என்ற ஸூத்ரத்தின் மூலம் காண்பிக்கிறார்.

பக்தியோகம் செய்பவர்கள் வர்ணாஶ்ரம தர்மங்களை விடாமல் அநுஷ்டிக்கவேண்டும். ப்ராஹ்மணனாக இருந்தால் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அக்நிஹோத்ரம் முதலான வைகளை அநுஷ்டித்தாகவேண்டும் என்பதையும் **अग्निहोत्रादि तु तत्कार्यायैव तद्दर्शनात् அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்ஶநாத்** என்ற ஸூத்ரத்தின் மூலமாகவும் காண்பித்துள்ளார். இப்படி பக்தியோகத்தை அநுஷ்டிப்பவர்கள் கர்மயோகத்தையும் விடாமல் கடைப் பிடிக்கவேண்டும். ஶாஸ்த்ர முறைப்படி இந்த கர்ம யோகத்தைச் செய்யமுடியுமா? என்று கேட்டால் கொஞ்சம் ஸந்தேஹம் தான். காரணம் ஸ்நானம், ஆசமனம் இவைகளை முதலில் ஶாஸ்த்ர முறைப்படிச் செய்ய வேண்டும். ஆசமனத்தில் முதலில் உள்ளங்கையில் ஜலம் எடுத்துக்கொண்டு மூன்று முறை பருகவேண்டும். அந்த ஜலம் **माषमग्नजलं पिबेत् மாஷமக்நஜலம் பிபேத்** என்றபடி ஒரு உளுந்து முழுகுகிற அளவு இருக்கவேண்டும். இப்படி எல்லா ஆசமனங்களையும் பொறுமையாக நிதானமாகச் செய்யவேண்டும். பிறகு ஸ்நானம் முதலாக எல்லாவற்

றையும் சரிவரச்செய்தால் தான் கர்மயோகம் ஸித்திக்கும். அது இல்லாமல் ஞானயோகம் ஸித்திக்காது. ஞானயோக மில்லாமல் பக்தியோகம் நிலைபெறாது. இதை அர்ஜுனன் கண்ணனிடம் கூறும்பொழுது, மிகவும் சஞ்சலமான மனதை அடக்கி இந்த யோகங்களை பண்ணுவது என்பது காற்றை ஒரு சிறு குடுவையில் அடைத்து வைக்க முயல்வதற்கு ஸமமாகும் என்று-

**योऽयं योगस्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन।**
**एतस्याहं न पश्यामि चञ्चलात् स्थितिं स्थिराम्॥**

**चञ्चलं हि मनः कृष्ण प्रमाधि बलवद्दृढम्।**
**तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम्॥**

யோऽயம் யோகஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேந மதுஸூதந।
ஏதஸ்யாஹம் ந பஶ்யாமி சஞ்சலாத் ஸ்திதிம் ஸ்திராம்॥

சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம்।
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்॥

ஜிதேந்த்ரியனான அர்ஜுனனுக்கே மனதை அடக்குவது கஷ்டம் என்றால் நம்போன்றவர்களுக்கு ஸாத்யமாகுமா? ஸாத்யமாகாது என்கிறார் கலியன் திருக்குறுந் தாண்டகத்தில் –

**சத்தமும் செவ்வை நில்லாது என்செய்கேன் தீவினையேன்?**

**பத்திமைக்கன்புடையேனாவதே? பணியாய் எந்தாய்!**
**முத்தொளி மரகதமே முழங்கொளி முகில்வண்ணா! என்**
**அத்த! நின்னடிமையல்லால் யாதுமொன்றறிகிலேனே.**

முதலிழந்தார் பொலிசை இழந்தார் போலே என்றபடி பக்தியோகம் இல்லாதவர்களுக்கு பகவத் ப்ராப்தி ஏற்படாதோ? என்றால், அதற்காகத் தான் **ஶரணாகதியை உபாயமாக** அநுஷ்டிக்கவேண்டும் என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**भक्त्या परमया वाऽपि प्रपत्यावा महामते।**
**प्राप्योहं नान्यथा प्राप्यो मम कैङ्कर्यलिप्सुभि:॥**

பக்த்யா பரமயா வாऽபி ப்ரபத்யாவா மஹாமதே।
ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ ம மகைங்கர்யலிப்ஸுபி:॥

என்பது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை வசனம். பக்தியோகம் மற்றும் ஶரணாகதி இவற்றால் மட்டுமே என்னை அடைய முடியும் இதைத்தவிர வேறு வழியில்லை என்கிறான் பகவான்.

ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் என்னிடத்தில் ஶரணாகதி பண்ணினவர்களைக் காப்பாற்றுவதே என்னுடைய ஸங்கல்பம் என்கிறார்.

**सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते।**

**अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम॥**

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥

இந்த ப்லோகத்தினுடைய அர்த்தத்தை ஸ்வாமி தேஶிகன் அபயப்ரதான ஸாரத்தில் அழகாக ஸாதிக்கிறார். அம்ருதாஸ்வாதினியில்-

**ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்**
**உனக்கடிமை யாகின்றேன் என்கின்றார்க்கும்**
**அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்**
**அஞ்சேல் என்றருள் கொடுப்பன் இதுதான் ஓதும்**
**இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்**
**இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும்**
**நெருக்காத நீள்விரதம் எனக்கொன்றென்னும்**
**நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலை பெற்றோமே.**

என்னிடத்தில் ஶக்தியும் இல்லை, ஞானமும் இல்லை,. பக்தியோகம் செய்ததாக நினைத்து அதற்கான பலத்தை நீ எனக்கு கொடுக்கவேண்டும் என்று யாசிப்பதே ஶரணாகதி.

ஶரணாகதி என்று சொல்லக்கூடிய ப்ரபத்தியானது வேறொன்றையும் எதிர்பார்க்காமல் எல்லா பலன்களையும் கொடுக்கவல்லது என்று ஸனத்குமார ஸம்ஹிதை கூறுகிறது.

**प्रपत्ते: क्वचिदप्येवं परापेक्षया न विद्यते।**
**साहि सर्वत्र सर्वेषां सर्वकाम फलप्रदा॥**

ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே।
ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா॥

## ஶரணாகதியும் பக்தியோகமும்

அந்த காலத்தில் பணவசதி படைத்தவர்கள் அந்தந்த ஊர்களில் பல சத்திரங்களைக் கட்டி யாத்திரை செல்பவர்களுக்கு தங்கும் வசதியும், ஆஹாரங்களும் செய்து கொடுப்பார்கள். வந்து செல்லக்கூடிய யாத்ரிகர்கள் அங்கே தங்கி உணவருந்திவிட்டு செல்பவர்களும் உண்டு. சிலபேர் ஸ்வயம்பாகம் செய்துகொள்பவர்கள் தாங்களே தளிகைப் பண்ணி சாப்பிட்டு செல்வதும் உண்டு. ஒரு சமயம் ஒரு சத்திரத்திற்கு இருவர் வந்து சத்திர நிர்வாஹியை சந்தித்தனர். அதிலொருவர் நான் ஸ்வயம் பாகி ஆகையால் அதற்கான சாமான்களும் விறகு முதலானவைகளும் தாருங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டு சென்றார். அதற்கான வேலைகளையும் தொடங்கினார். மற்றொருவர் நான் ஸ்வயம்பாகியல்ல எனக்கு சாப்பாடு கிடைத்தால் போதும் என்றார். உடனே அந்த நிர்வாகி ஒரு தேஶாந்திரி சீட்டைக் கொடுத்து அந்த கோவிலில் கொடுங்கள் என்றார். அதை வாங்கிக் கொண்டு கொடுத்தார் ப்ரஸாதம் கொடுத்தார்கள். அதை சாப்பிட்டுவிட்டு சத்திரத்திற்கு வந்து

விட்டார். முதலாமவர் தளிகை செய்துகொண்டே இருக்கிறார் இன்னும் ப்ரஸாதம் தயாராகவில்லை. இவர் பக்தி யோக நிஷ்டர். நீண்டகாலம் ஶ்ரமப்பட்டால் தான் எம்பெருமானை அடைய முடியும். இரண்டாமவர் ப்ரபத்தி நிஷ்டர் ஶரணாகதி பண்ணினால் குறுகிய காலத்திலேயே பலன் கிடைத்துவிடும். ஆகையினாலேயே எம்பெருமானிடத்தில் தன்னுடைய இயலாமையையும் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலான கைமுதல் எதுவுமில்லை என்பதையும் விண்ணப்பித்து, பக்தியோக ஸ்தானத்திலிருந்து எனக்கு அநுக்ரஹம் பண்ணவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு திருமழிசைப் பிரான் திருச்சந்த விருத்தத்தில் அநுஸந்தானம் செய்கிறார். அதாவது என்மீது இரக்கம் வைத்து நான் எல்லாம் அநுஷ்டித்ததாக நீ எண்ணிக்கொள்ளவேண்டும் என்பதை **நிரந்தரம் நினைப்பதாக, நீ நினைக்கவேண்டும்** யோகாநுஷ்டானம் பண்ணினவனாக நினைக்கவேண்டும் என்கிறார்.

# அபயப்ரதானம்

ஶ்ரீராமபிரான் யார் யாருக்கு அபயப்ரதானம் பண்ணினான் என்பதை அடைக்கலப்பத்து ப்ரபந்தத்தில் பட்டியலிட்டு காண்பிக்கிறார் ஸ்வாமி தேஶிகன்-

**காகம் இராக்கதர் மன்னர் காதலி கத்திரபந்து**
**நாகம் அரன் அயன் முதலா நாகநகரார் தமக்கும்**
**போகமுயர் வீடுபெறப் பொன்னருள் செய்தமை கண்டு**
**நாகமலை நாயகனார் நல்லடிப்போது அடைந்தேனே.**

ஸீதாபிராட்டியிடம் அபசாரப்பட்டவர்கள் இருவர். ஒன்று காகம், மற்றொருவர் இராக்கதர் மன்னன் ராவணன். இவ்விருவருடைய பாபத்தில் அதிகமான பாபம் யாருடையது என்றால் பிராட்டியின் திருமேனியைத் துன்புறுத்திய காகத்தின் பாபமே மிகவும் அதிகமானது. அவன் மாம்ஸ லோபத்தால் திருமேனியைத் துன்புறுத்த, ராகவன் ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகத்தால் துரத்தினான். அந்த காகமானது தன் பெற்றோர்களிடமும், ரிஷிகளிடமும், மூன்று லோகங்களுக்கும் சென்று தன்னைக் காப்பாற்று மாறு கேட்டுக் கொண்டது பலனளிக்கவில்லை.

**स पित्रा च परित्यक्त: सुरैस्सर्वैर्महर्षिभि:।**
**त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गत:॥**
**स तं निपतितं भूमौ शरण्यश्शरणागतम्।**
**वधार्हमपि काकुत्स्थ: कृपया पर्यपालयत्॥**

ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைஸ்ஸர்வைர்மஹர்ஷிபி:।
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:॥
ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்யஶ்ஶரணாகதம்।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்॥

எவராலும் காப்பாற்ற முடியாத காகாஸுரன் பிராட்டியுடன் சேர்ந்திருக்கக்கூடிய ஸ்ரீராகவனின் திருவடிகளில் ஶரணடைந்து காப்பாற்றப்பட்டான். ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகமே பண்ணியிருந் தாலும் ஶரணாகதிக்கு வேறோர் அரணாக என்றபடி ஶரணாகதி தான் எந்த ஆபத்திலும் காப்பாற்றும் என்று கருத்து.

ஹனுமன் முதன் முதலில் ராமலக்ஷ்மணர்களை ஸந்தித்தபோது அவர்களுடைய விசாலமான தோள்களைப் பார்த்து இந்த வலிமையான தோள்கள் ஸுக்ரீவனின் ரக்ஷணத்திற்கு தேவை என்று நினைத்து அவற்றின் பெருமைகளைக் கொண்டாடுகிறார். ஸ்வாமி தேஶிகனும் ரகுவீரனின் புஜபலத்தில் ஈடுபட்டு ஜயஜயமஹா வீர என்று ரகுவீரகத்யத்தில் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்.

அஶோகவனத்தில் ஹனுமான் ஸீதாபிராட்டியை ஸந்தித்து தான் ராமதூதன் என்பதை உறுதிபடுத்திய ஸமயத்தில், பிராட்டி ஹனுமனிடத்தில் காகாஸுர வ்ருத்தாந்தத்தைக் கூறுகிறாள். அப்போது ஒரு சிறிய காக்கையை அடிப்பதற்கு ப்ரஹ்மாஸ்த்ரம் தேவையா? என்று நினைக்கிறார். அதைக் குறிப்பால் உணர்ந்த பிராட்டி **मत्कृते काकमात्रेतु ब्रह्मास्त्रं समुतीरितम् மத்க்ருதே காகமாத்ரே து ப்ரஹ்மாஸ்த்ரம் ஸமுதீரிதம்** என்மீதுள்ள ப்ரீதியால்

ராகவன் ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் செய்தார் என்று கூறினாளாம். தன் தகப்பனாரான தஶரதன் பார்த்து பண்ணி வைத்த பார்யை என்பதால் பிராட்டியிடம் அதிக ப்ரீதியோடு இருந்தான் **प्रिया तु सीता रामस्य दारा: पितृकृता इति ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி** என்று ஶ்ரீவால்மீகி வர்ணிக்கிறார்.

குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் எம்பெருமானைச் சரணாகதி பண்ணினால் உய்வது திண்ணம் என்பதற்கு காகமே உதாஹரணம். திருமங்கை மன்னன் பல உயிர்களைக் கொன்ற உதிரக்கையோடு (ரத்தக் கையோடு) திருவேங்கடமுடையான் ஸந்நிதிக்குச் சென்று **கொன்றேன் பல்லுயிரை குறிக்கோள் ஒன்றிலாமையினால்** என்று சொல்லி இந்த பாபத்தி லிருந்து விடுபட ஶரணாகதியே சிறந்த உபாயம் என்பதையறிந்து **வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே** என்று ஶரணாகதிப் பண்ணுகிறார். எப்படிப்பட்ட மஹாபாபத்தைச் செய்திருந்தாலும் அதைப் போக்கி எம்பெருமானை வஶீகரிப்பதற்கு சிறந்த உபாயம் ஶரணாகதிதான் என்பதை ஸனத்குமார ஸம்ஹிதை எடுத்துக் காண்பிக்கிறது-

**कुयोनिष्वपि सञ्जातो यस्सकृच्छरणङ्गतः।**
**तं मातापितृ हन्तारमपि पाति भवार्तिहा॥**
குயோநிஷ்வபி ஸஞ்ஜாதோ யஸ்ஸக்ருச்சரணங்கத:।
தம் மாதாபித்ரு ஹந்தாரமபி பாதி பவார்திஹா॥

என்று. இந்த ஶரணாகதியை ஒரு முறை செய்தால் போதும் என்கிறது ஶாஸ்த்ரம். இப்படி ஶரணாகதி பண்ணி நல்வழியடைந்தவர்கள் பலர் உண்டு. அவர்களில் விபீஷண ஶரணாகதி மிகவும் முக்கியமானது.

விபீஷணன் தன் ஸஹோதரனான ராவண னிடத்தில் நீ இப்படி தர்மத்தை மீறி நடப்பது தவறு. நீ எல்லாம் அறிந்தவன் ஆதலால் ஸீதாபிராட்டியை ராமனிடம் ஒப்படைத்துவிடு என்று பல அறிவுரைகளைக் கூறுகிறான். அப்பொழுது அந்த ஸபையிலேயே இப்படி வேறு யாராவது கூறியிருந்தால் வதம் செய்திருப்பேன் என்று பலவாறு தீய வார்த்தைகளால் பேசி நீ நம் குலத்திற்கு கோடாரி என்று அவமானப்படுத்தியதை வால்மீகி பகவான் இவ்வாறு கூறுகிறார்-

**योऽन्यस्त्वेवंविधं ब्रूयात् वाक्यमेतन्निशाचर।**
**अस्मिन् मुहूर्ते न भवेत त्वांतु धिक् कुलपांसन॥**
யோSந்யஸ்த்வேவம்விதம் ப்ரூயாத் வாக்யமேதந்நிஶாசர।
அஸ்மிந் முஹூர்தே ந பவேத் த்வாம் து திக்குலபாம்ஸ ந॥

இராவணன் இப்படி கொடூரமான வார்த்தைகளைக் கொட்டியதால் தர்மிஷ்டனும் நியாயவாதியுமான விபீஷணன் இனி எதுவும் தனக்கு வேண்டாமென்று உதறித்தள்ளி தன்னுடைய கதாயுதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அவனுடைய அபிமானிகளான நான்கு ராக்ஷஸர்களுடன் ஆகாயமார்க்கமாகக் கிளம்பினான். இதை ஶ்ரீவால்மீகி-

**इत्युक्त: परुषं वाक्यं न्यायवादी विभीषण: उत्पात**
**गदापाणि: चतुर्भि: सह राक्षसै: ॥**

இத்யுக்த: பருஷம் வாக்யம் ந்யாயவாதீ விபீஷண: உத்பாத
கதாபாணி: சதுர்பி: ஸ ஹ ராக்ஷஸை: ||

ராக்ஷஸ கூட்டத்தைவிட்டு ராகவனுடைய கோஷ்டிக்கு வரக்கூடிய விபீஷணன் கையில் கதையிருந்ததாக வால்மீகி வர்ணிக்கிறார். இங்கே ஒரு ஶாஸ்த்ரார்த்தத்தைக் காண்பிக்கிறார் மஹரிஷி. பகவத்ஸந்நிதி, ஆசார்ய ஸந்நிதி, ராஜா, குழந்தை போன்றோர் இருக்குமிடம் சென்றால் வெறுங்கையுடன் செல்லக்கூடாது அவரவர்களுக்குப் பிடித்த வஸ்துக்களை எடுத்துச் செல்லவேண்டு மென்பது ஶாஸ்த்ரம். யுத்தத்திற்காக ஸமுத்ரத்தின் அக்கரையில் வந்துள்ள ராகவனை அடைய கதோயோடு செல்கிறான். எப்படி வருகிறான், **आजगाम मुहूर्तेन यत्र राम: सलक्ष्मण: ஆஜகாம முஹூர்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண:** ரொம்ப வேகமாக ஒரு முஹூர்த்த காலத்தில் வந்தான் என்கிறார்.

**त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गत:।**
**सर्वलोकशरण्याय राघवाय महात्मने।**
**निवेदयत मां क्षिप्रं विभीषनमुपस्थितम्॥**

த்யக்த்வா புத்ராஞ்ஶ்ச தாராஞ்ஶ்ச ராகவம் ஶரணம் கத:।
ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே॥
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்॥

நான்கு ராக்ஷஸர்களுடன் வந்த விபீஷணன் வாநர முதலிகளை முன்னிட்டுக்கொண்டு ஸர்வலோக ஶரண்யனான ஶ்ரீராகவனின் திருவடிகளிலே ஶரணாகதி பண்ணுகிறான். ராகவன் ஸுக்ரீவன் முதலான வாநர வீரர்களை அழைத்து விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமா? என்று கேட்க, அவர்கள் அவனிடத்தில் பல குற்றங்கள் உள்ளன. அதனால் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்று கூறினார்கள். உடனே ராகவன் அவர்களுக்கு ஶரணாகதி பற்றியும் அதை ரக்ஷணம் பண்ணும் தன்னுடைய குலப் பெருமையையும் எடுத்துக்கூறி. அப்படிப்பட்ட நான் விபீஷணனான இந்த ஶரணாகதனை ரக்ஷிக்கவில்லை என்றால் உலகம் என்னை தூற்றும். விபீஷணனோ ரகுகுலத்தைக் கொண்டாடிக் கொண்டு **ராகவா** என்று கூக்குரலிடுகிறான். அவனை ரக்ஷிக்காமல் போனால் ஶரணாகதிரக்ஷண தர்மத்தை தவறவிட்டவனாவேன் என்று சொல்லி ஶரணாகதி ரக்ஷண தர்மத்தைக் கடைப்பிடித்த புறா, குரங்கு கதைகளைக் கூறி தர்மம் மிகவும் ஸூக்ஷ்மமானது **ஸூக்ஷ்ம: பரம துர்ஜ்ஞேய:** அதை

எவராலும் சுலபமாக புரிந்துகொள்ள முடியாது அதனால் தர்மத்தை விடக்கூடாதென்கிறார்.

திருப்பாற்கடலில் ஶயனித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு துஷ்டர்களால் எந்த ஆபத்தும் வராத வண்ணம் விஷ ஜ்வாலையைக் கக்கிக்கொண்டு பரமனைப் பாதுகாப்பவர் ஆதிஶேஷனாகிற அனந்தாழ்வான். இங்கு விபீஷணனால் ராகவனுக்கு எந்த தீங்கும் வரக்கூடாதென்று ஸுக்ரீவனும் லக்ஷ்மணனும் சேர்ந்து ஶரணாகதி செய்கிறார்கள் விபீஷணனைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று. இவ்விரண்டில் விபீஷணன் ஶரணகதியே மிகச் சிறந்தது என்று மஹாராஜருக்கு ராகவன் எடுத்துரைக்கிறார். ஸுக்ரீவனைப் பார்த்து பெருமாள் கேட்கிறார் ஹே! மஹாராஜரே! ஶக்தியற்றவன் என்று எம்மை நினைத்து விட்டீரோ? துஷ்டனோ அல்லது ராக்ஷஸனோ என்னை ஒன்றும் செய்யமுடியாது. அதுமட்டுமல்ல இந்தபூமியிலுள்ள பிஶாசர், தானவர், யக்ஷர், ராக்ஷஸர்கள் இப்படி எல்லோரும் சேர்ந்து என்னுடன் போர்புரிய வந்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. மாறாக அவர்களை விரல்நுனியால் கொன்று குவிப்பேன் என்கிறார்.

**सुदुष्टो वाप्यदुष्टो किमेष रजनीचरः।**
**सूक्ष्ममप्यहितं कर्तुं ममाशक्तः कथञ्चन॥**
**पिशाचान् दानवान् यक्षान् पृथिव्यां चैव राक्षसान्।**
**अङ्गुल्यग्रेण तान् हन्यामिच्छन् हरिगणेश्वर॥**

ஸுதுஷ்டோ வாப்யதுஷ்டோ கிமேஷ ரநீசர:।
ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்தும் மமாஶக்த:கதஞ்சன॥
பிஶாசான் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸந்।
அங்குல்யக்ரேண தாந் ஹன்யாமிச்சந் ஹரிகணேஶ்வர॥

பெருமாள் இப்படி தன் ஸ்வரூபத்தை வெளியிட்டதும் ஸுக்ரீவாதிகள் விபீஷணனை அழைத்துவந்து ராமனோடு சேர்த்து பெருமையடைந்தனர்.

பெருமாள் ஸமுத்ரத்தைக் கடக்கவேண்டும். அதற்கு என்ன வழி? என்று விபீஷணனைக் கேட்கிறார். அதற்கு ஸமுத்ரராஜனை ஶரணடைய வேண்டும். அதுதான் ஒரே வழி என்கிறான் விபீஷணன்.

**एवमुक्तस्तु धर्मज्ञः प्रत्युवाच विभीषणः।**
**समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति॥**
ஏவமுக்தாஸ்து தர்மஜ்ஞ: ப்ரத்யுவாச விபீஷண:।
ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி॥

இப்படி எல்லாவற்றிலும் எல்லோருக்கும் ஶரணாகதியே சிறந்த உபாயமாகிறது.

இந்த ஶரணாகதியானது ஐந்து அங்கங்களோடு கூடினது. ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜ்ஜனம், மஹாவிஶ்வாஸம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம் ஆகியவை. இவற்றுடன் ஆத்மாவை எம்பெருமானிடத்தில்

ஒப்படைக்கவேண்டும். இதை ஸ்வாமி தேஶிகன் அமிர்தாஸ்வாதினீ ப்ரபந்தத்தில்-

**நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்**
**நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன்**
**உன்னருளுக்கினிதான நிலையுகந்தேன்**
**உன் சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்**
**மன்னிருளாய் நின்நிலை யெனக்குத் தீர்த்து**
**வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேனுன்னை**
**இன்னருளால் இனியெனக்கோர் பரமேற்றாமல்**
**என் திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே.**

ஶ்ரீமத் திருக்குடந்தையாண்டவன் ஶாஸ்த்ரார்த்தங் களையும் ரஹஸ்யார்த்தங்களையும் எல்லோருக்கும் எளிதில் புரியும்படியும், ரஸிக்கும்படியும் ஒரு லௌகிக உதாஹரணத்தைச் சொல்லி ஸாதிப்பது வழக்கம். அதை போலவே ப்ரபத்தியினுடைய ஐந்து அங்கங்களை மிக அழகாக ஸாதித்திருப்பதை நாம் இங்கு அநுபவிக்கலாம். அந்த காலத்தில் கஷ்டப்பட்டு உழைத்து ஸம்பாதித்து வைத்திருக்கும் செல்வத்தை காப்பாற்றுவதற்கு வங்கிகள் கிடையாது. அதனால் நம்பிக்கை, நேர்மை, நாணயம், இவையெல்லாம் நிறைந்திருந்த காலமாதலால் அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் கொடுத்து நாங்கள் தீர்த்த யாத்திரைசெல்வதால் வரும் வரை இதை பத்திரமாக

பாதுகாத்து வையுங்கள். வந்ததும் பெற்றுக்கொள்கிறோம் என்று கூறிச்செல்வர்கள். ஒருவர் தம் பொருளை ஒருவரிடம் கொடுத்து உமக்கு அநுகூலமாகவே இருக்கிறேன், ப்ரதி கூலமாக இருக்க மாட்டேன், இந்த ஊரில் உம்மிடத்தில் தான் எனக்கு பூர்ண நம்பிக்கை, இவற்றை பாதுகாப்பதற்கு தகுந்த பெட்டியோ ஸாமர்த்யமோ எனக்குக் கிடையாது, நீர் தான் ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி எம்பெருமானிடத்தில் ஶரணாகதி பண்ணுவது போல சொல்லி ஒப்படைக்கிறார். சாதாரண மனிதர்க ளிடத்தில் நம்பிக்கை வைப்பதுபோல எம்பெருமா னிடத்திலும் மஹாவிஶ்வாஸம் வைக்கவேண்டும். ஶரணாகதி பண்ணிவிட்டு தேஹாவஸானத்தில் மோக்ஷம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஸந்தேஹம் வரக்கூடாது. இந்த மஹா விஶ்வாஸம் என்பது பல ஜன்மாக்கள் எடுத்ததன் மூலமாக வரக்கூடியது.

**ரக்ஷிஸ்யதீதி விஶ்வாஸ:** எம்பெருமான் நம்மை ரக்ஷித்தே தீருவான் என்ற திடமான நம்பிக்கை இருந்ததால் தான் ராகவனைச் சரணடைந்தான் என்று ஶ்ரீவால்மீகி பகவான் காண்பிக்கிறார்-

**अनुजो रावणस्याहं तेन चाप्यवमानित:।**
**भवन्तं सर्वभूताना शरण्यं शरणं गत:॥**

**परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च।**
**भवत्गतं मे राज्यं च जीवितं च सुखानि च॥**

அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாப்யவமாநித:।
பவந்தம் ஸர்வபூதாநா ஶரண்யம் ஶரணம் கத:॥
பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச।
பவத்கதம் மே ராஜ்யம் ஜீவிதம் ச ஸுகாநி ச॥

இவ்விஷயத்தைத்தான் நின்னருளாங்கதியன்றி பாசுரத்தில் ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்துள்ளார். அப்படிப்பட்ட ஶரணாகதியைப்பற்றி ஆழ்வார்கள் அருளிச்செயல்களிலும் பூர்வாசார்யர்கள் திவ்யஸூக்திகளிலும் இருப்பதை நாம் தினமும் அநுஸந்தித்து அநுபவிக்கலாம்.

**ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதி**
**ந பக்திமாம்ஸ்த்வச் சரணாரவிந்தே।**
**அகிஞ்சநோ அநந்யகதியச்சரண்ய**
**த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே॥**
**ஶ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம்**

**அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தீ**
**கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ।**
**விதுஷீ ஸ்த்திதி மீத்ருஶீம் ஸ்வயம் மாம்**
**வ்ருஷஶைலேஶ்வர பாதஸாத்குரு த்வம்॥**
**(ஸ்வாமிதேஶிகன்)-ஶ்ரீதயாஶதகம்-30**

**குலங்களாயாரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்**
**நலங்களாய நற்சுவைகள் நாவிலும் நவின்றிலேன்**
**புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்**
**புனித! நின்**

**குலங்களாயாரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்**
**நலங்களாய நற்சுவைகள் நாவிலும் நவின்றிலேன்**

புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன் புனித! நின்
இலங்குபாதமன்றி மற்றொர் பற்றிலேன் எம்ஈசனே!
திருமழிசையாழ்வார்-திருச்சந்தவிருத்தம்

வாணி நிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப்பயனே
பேணினேன் அதனைப்பிழையெனக்கருதிப்
பேதையேன் பிறவிநோயறுப்பான்
ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி
இளையவர்கலவியின் திறத்தை
நாணினேன்வந்து உன் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்!
-பெரிய திருமொழி

குடதிசை முடியைவைத்துக் குணதிசைபாதம் நீட்டி
வடதிசைபின்புகாட்டித் தென்திசை இலங்கைநோக்கி
கடல்நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமா கண்டு
உடலெனக்கு உருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே.
திருமாலை-10

அகலகில்லேன் இறையுமென்று
அலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய்
என்னையாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன்
உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

**நம்மாழ்வார் திருவாய்மொழி 6-10-1**

துச்சாதனன் பலங்கொண்டு துகிலுரிகையில் த்ரௌபதி செய்வதறியாளாகி திகைத்துப் போய் **மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான் ஹரி:** என்ற வஸிஷ்டர் வசனப்படி ஶ்ரீகண்ணனை மனஸால் த்யானித்து ஶரணாகதி பண்ணுகிறாள். இது த்ரைபதி ஶரணாகதியாகும்.

**ஹா க்ருஷ்ணா! த்வாரகா வாஸா க்வாஸி யாதவ நந்தனா।**
**இமாம் அவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதாம் கிம் உபேக்ஷஸே॥**
**ஶங்கசக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்சுதா।**
**கோவிந்த! புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதம்॥**

**இருகையும் விட்டேனோ த்ரௌபதியைப்போலே** என்ற பெண்பிள்ளை, ரஹஸ்யப்படி த்ரௌபதி எம்பெருமானிடம் ஶரணாகதி பண்ண, தீனபந்து வான ஶரண்யன், த்ரௌபதிக்கு அக்ஷயமாக துகிலைப்பணித்து, துச்சாதனன் அயர்ந்துவிடும் வகையில் அநுக்ரஹித்து அவள் மானத்தைக் காப்பாற்றினான்.

ஶரணாகதியாகிற உபாயத்தை நினைத்தபொழுது எப்பொழுது வேண்டுமானாலும் பண்ணலாம். தேஶ கால ஜாதி நியமமில்லை. லகுவான உபாயம், பலமோ பெரியது.

கஜேந்திரன், மடுவில் முதலை வாய்ப்பட்டு உயிருக்கு மன்றாடி ஶ்ரீமந்நாராயணனிடம் ஶரணாகதி பண்ணிற்று தன் உயிரைப் பெற்று உய்ந்து போயிற்று. பூர்ணபலனையடைந்தது. இவ்விருத்தாந்தத்தை ஸர்வேஶ்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணிய திருமங்கை யாழ்வார் பேசுகிறார்-

**போரானை பொய்கைவாய்க் கோட்பாட்டு நின்றலறி**
**நீரார்மலர்க்கமலம் கொண்டு ஓர் நெடுங்கையால்**
**நாராயணா ஓ! மணிவண்ணா நாகணையாய்!**
**வாராய் என்னாரிடரை நீக்காய் என வெகுண்டு**
**தீராத சீற்றத்தால் சென்று இரண்டு கூறாக**
**ஈரா அதனை யிடர்கடிந்தான் எம்பெருமான்**

**- சிறியதிருமடல்**

ஶரணாகதி என்னும் உபாயம் ஸகல பலஸாதன உபாயம் என்பது ஶ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம். இதை ஶ்ரீ நம்மாழ்வார், பகவத் ராமாநுஜர், ஶ்ரீமந்நிகமாந்த மஹாதேஶிகன் முதலிய பூர்வாசார்யர்கள் போற்றிப்பேணித் தாங்களும் அநுஷ்டித்து பின்புள்ளார்களும் அநுஷ்டித்துய்ந்துபோக க்ரந்தமூலமாக அநுக்ரஹித்துள்ளனர். எவ்வளவு அதின் பெருமையைக் கூறினாலும் கூறி முடியாது எனினும் இன்பம் பயக்குமாதலால் ஒருவாறு கூறலாயிற்று. ஶரணாகதி உபாயங்கொண்டு ஶரண்யனை அடைந்துய்வோமாக.

**இங்கும் அங்கும் திருமாலன்றின்மைகண்டு**
**எங்ஙனே வண்குருகூர்ச்சடகோபன்**
**இங்ஙனேசொன்ன ஓராயிரத்து இப்பத்தும்**
**எங்ஙனேசொல்லிலும் இன்பம் பயக்குமே.**

**-திருவாய்மொழி 7-9-11**

**ஆசார்யன் திருவடிகளே ஶரணம்**